# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 342/2023**

**Deposition of Witness for PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | காசி | Caste | : | |
| Father/Husband Name | : | பாண்டி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 17.03.2026**

**முதல் விசாரணை**

நான் மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 ராமன் எனது மாமா முறை ஆவார். கடந்த 2015ம் ஆண்டு அ.சா.1 ராமன் எதிரி பெருமாளிடம் 3 பவுன் நகையை அடகு வைக்க கொடுத்திருந்தார். பின்பு 6 மாதம் கழித்து அ.சா.1 எதிரியிடம் அடகு பணத்தை கொடுத்து நகையை திருப்பி தருமாறு கேட்டார். அதற்கு எதிரி நகை முழ்கிவிட்டது என்று சொன்னார். நகை சீட்டை எதிரியிடம் கேட்டதற்கு அதுபோல் தன்னிடம் எதுவும் இல்லை என்றும், பின்பு நகையை சீட்டை அ.சா.1 தான் ஏற்கனவே கொடுத்துவிட்டதாக மலுப்பலாக சொன்னார். பின்னர் அ.சா.1 சுருளி வீட்டில் வைத்து இதுசம்பந்தமாக எதிரியிடம் பேசினோம். ஆனால் எதிரி எதற்கும் சம்மதிக்கவில்லை. பின்னர் இதுசம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது ஊர் பொறுப்பு மேட்டுபட்டி திருமங்கலம் செல்லும் வழியில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 பாப்பாப்பட்டி அருகில்உள்ள ஊரில் வசிக்கிறார் என்றால் சரிதான். அ.சா.1 எனது தாய் மாமா ஆவார். அ.சா.1 விடுதலை சிறுத்தை கட்சியில் மாநில துணை செயலாளர் என்றால் சரிதான். அ.சா.1 தான் எனக்கு தகவல் சொன்னார் அதன் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு அ.சா.1 உடன் தான் சென்றேன். அ.சா.1 நகை கொடுத்த ஆறுமாதத்திற்குள் புகார் கொடுக்க சென்றோம். அ.சா.1 தான் அவர் கைப்பட எழுதி கொடுத்தார். மேற்படி புகாரில் என்னிடம் சாட்சியாக கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அ.சா.1 நகைக்குரிய ரசீது எதுவும் ஒப்படைத்தாரா என்றால் அ.சா.1 எதுவும் ஒப்படைக்கவில்லை. நகையை எதிரி அ.சா.1யிடம் வாங்கி கொண்டு அடகு வைக்க செல்லும் போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது தாய்மாமா என்பதால் அவருக்கு கேட்டுகொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 342/2023**

**Deposition of Witness for PW4**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ரமேஷ் | Caste | : |
| Father/Husband Name | : | கருப்பையா | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**( Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 17.03.2026**

**முதல் விசாரணை**

நான் அயன்கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 10 வருடத்திற்கு முன்பு எங்கள்ஊர் கோவில் சாவடி முன்பு வைத்து கையெழுத்து போட்டேன். போலீசார் என் முன்பு நகை பிரச்சனை சம்பந்தமாக படம் வரைந்தார்கள். அதற்காக நான் கையெழுத்து போட்டேன். என்னுடன் சாமிவேல் என்பவரும் கையெழுத்து போட்டார். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது சித்தப்பா ஆவார். நான் அன்றைய தினம் கடை பக்கம் சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தேன். போலீசார் அழைத்ததால் சென்றேன். நான் போவதற்கு முன்பு அங்கு ஆட்கள் இருந்தார்களா என்றால் இல்லை. நான் படம் வரைந்த பேப்பரில் தான் கையெழுத்து போட்டேன். சாமிவேல் அதற்கு பின்பு தான் வந்தார். நான்

சொன்னது போல் சொன்ன இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் அ.சா.1 எனது சித்தப்பா என்பதால் என்னை காவல்நிலையத்தில் வரவழைத்து எழுதாத வெள்ளை பேப்பரில் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**